Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், ஜனவரி 14, 2025 | இதழ் 276

## தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை சார்பில்

### ரூ.27.33 கோடியில் அலுவலக வளாகங்கள், தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடங்கள், விடுதிக் கட்டிடங்கள்:

# முதலமைச்சர் ஸ்டாலின் திறந்தார்



சென்னை, 14 ஜனவரி 2025: ரூ.27.33 கோடியில் அலுவலக வளாகங்கள், தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடங்கள், விடுதிக் கட்டிடங்கள்: முதலமைச்சர் ஸ்டாலின் திறந்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ.27.33 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், அரசினர் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் மற்றும், மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 8 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம் -வி. மருதூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் - பட்டணம்காத்தான் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் 19 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம், என மொத்தம் 27 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம், வி.மருதூர் கிராமத்தில் தரை மற்றும் முதல் தளத்துடன், 3 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் கிராமத்தில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 4 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 8 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்களை முதலமைச்சர் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் 1 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்கள் தங்கும் விடுதிக்கட்டடம்; சென்னை மாவட்டம் வண்ணாரப்பேட்டை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 3 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழிற் பிரிவுகளுக்கான கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் 4 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்;

சேலத்தில் 1 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்; கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் 8 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம்; என மொத்தம் 19 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

அமைச்சர் பொன்முடி இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் க. பொன்முடி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த், திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீரராகவ ராவ், வேலைவாய்ப்பு துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இல்லத்தில் மகிழ்ச்சிப் பொங்கல்! மாநிலத்தில் வளர்ச்சிப் பொங்கல்!

சென்னை, 13 ஜனவரி 2025: நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் பொங்கல் வாழ்த்து மடல்.

சமத்துவமே தமிழரின் பண்பாடு என்பதை உலகத்திற்கு உரக்கச் சொல்கின்ற வகையில் சாதி ஸ்ரீ மத-பாலின பேதமின்றி, இயற்கையைப் போற்றி, உழைப்புக்கு முதல் மரியாதை செலுத்தி, உழவுக்குத் துணை நின்ற கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் மனிதநேயத் திருவிழாதான் பொங்கல் நன்னாள். அது ஒன்றுதான் நம் பண்பாட்டுத் திருநாள் என்பதைத் திராவிட இயக்கம் நிலைநாட்டி, மக்களின் திருவிழாவாகக் கொண்டாடச் செய்து வருகிறது.

தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டின் மீது தாக்குதல் தொடுத்த வேறுவிதமான பண்பாடுகளைத் தகர்ப்பதற்கான ஆயுதமாகத் தமிழர் திருநாள் எனும் பொங்கல் திருநாளைக் கொண்டாடி வருகிறோம். இல்லத்தில், உள்ளத்தில், உணர்வில், கலையில், இலக்கியத்தில், வீர விளையாட்டுகளில், வாழ்வியல் நடைமுறைகளில் தமிழர்களுக்கெனச் சிறந்த பண்பாடு உண்டு என்பதைக் காட்டுகின்ற வகையில் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் வாழ்கின்ற மக்கள் பொங்கலை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது வழக்கம். வேளாண் உழைப்பின் விளைச்சலைப் போற்றும் வகையில் புதுப்பானையில் பொங்கலிட்டு, தங்கள் வாழ்க்கையில் விடியல் தந்த சூரியனுக்கு அதைப் படையலிடும் பழக்கம் கொண்டவர்கள் தமிழர்கள்.

அறுவடைத் திருநாளாம் பொங்கலின் அடையாளம் என்பது, வாழ்க்கையில் விடியல் ஏற்பட வேண்டும் என்பதுதான். அதனால்தான், தை பிறந்தால் வழி பிறக்கும் என்று நம்பிக்கையுடன் பொங்கலைக் கொண்டாடி மகிழ்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களின் அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழர்களின் இல்லத்திலும் உள்ளத்திலும் உண்மையான மகிழ்ச்சிப் பொங்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களின் வாழ்விற்கு விடியல் தரும் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது திராவிட மாடல் அரசு.




# மகா கும்பமேளா இந்தியாவின் காலத்தால் அழியாத ஆன்மீக பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதாகவும், நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை கொண்டாடுவதாகவும் உள்ளது

சென்னை, 14 ஜனவரி 2025: ஐஎன்எஸ் சூரத், பிரயாக்ராஜில் மகா கும்பமேளா 2025 தொடங்குவதை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். பாரதத்தின் மாண்புகளையும், கலாச்சாரத்தையும் போற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு இது மிகவும் சிறப்பான நாள் என்று திரு மோடி குறிப்பிட்டுள்ளார். மேலும், மகா கும்பமேளா, இந்தியாவின் காலம் கடந்த ஆன்மீக பாரம்பரியத்தை உள்ளடக்கியுள்ளது மற்றும் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தைக் கொண்டாடுகிறது.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளதாவது:

"பாரதத்தின் விழுமியங்களையும், கலாச்சாரத்தையும் போற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு இது ஒரு மிகவும் சிறப்பு வாய்ந்த நாள்!


, பிரயாக்ராஜில் தொடங்குகிற மகா கும்பமேளா 2025 எண்ணற்ற மக்களை நம்பிக்கை, பக்தி மற்றும் கலாச்சாரத்தின் புனிதமான சங்கமத்தில் ஒன்றிணைக்கிறது. இந்தியாவின் காலம் கடந்த ஆன்மீக பாரம்பரியத்தை உள்ளடக்கிய மகா கும்பமேளா, நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தைக் கொண்டாடுகிறது."



# பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 15 மகாராஷ்டிராவிற்கு பயணம் மேற்கொள்கிறார்

சென்னை, 14 ஜனவரி 2025: ஐஎன்எஸ் சூரத், ஐஎன்எஸ் நீலகிரி, ஐஎன்எஸ் வக்ஷீர் ஆகிய மூன்று முன்னணி கடற்படை போர் கப்பல்களை மும்பை கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்

ரூவி மும்பை கார்கரில் இஸ்கான் கோயிலை பிரதமர் திறந்து வைக்கிறார்



# சென்னையில் போகிப் பண்டிகை கொண்டாட்டம்: புகை மூட்டத்தால் விமான சேவை பாதிப்பு



PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## 2026 சட்டசபை தேர்தலுக்காவது பழனிசாமி வருவாரா?சூனாபானா கேரக்டர்தான் எடப்பாடி மகளிர் பஸ் பயணத்தை'லிப்ஸ்டிக் அடித்து விட்டுள்ளார்கள்' என்று கொச்சைப்படுத்தி ஓட்டுமொத்த மகளிரையும் கேவலப்படுத்தி விட்டார் - பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

சென்னை, 14 ஜனவரி 2025: சட்டப்பேரவையில் முதலமைச்சரின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பயந்து ஓடிய கோழை பழனிசாமி, வெளியே சென்று வழக்கம் போலவே தன் உளறல்களை பேட்டியாக கொட்டியிருக்கிறார். சட்டப்பேரவையில் முதலமைச்சரும் அமைச்சர்களும் சான்றுகளுடன் தோலுரித்த விரக்தியில் செய்தியாளர்களிடம் வண்டி வண்டியாக பொய்களை கொட்டியிருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்திருக்கிறார் பழனிசாமி. இப்படிதான் விக்கிரவாண்டி இடைத் தேர்தலையும் புறக்கணித்தார். இது தேர்தல் புறக்கணிப்பு அல்ல. பழனிசாமி தலைமை மீதான ஆளுமை அசிங்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடு.

2017 ஆர்.கே.நகர் இடைத் தேர்தல், 2019 நாடாளுமன்ற தேர்தல், 2019-ல் நடந்த 22 சட்டசபை தொகுதிகளின் இடைத் தேர்தல், 2019-ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தல், 2021-ல் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல், 2022-ல் நடந்த நகர்புற உள்ளாட்சி தேர்தல், ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், விளவங்கோடு இடைத் தேர்தல் என தொடர்ந்து 10 தேர்தல்களில் தோற்றவர்தான் புரட்சித் தமிழர்!

ஈரோடு கிழக்கு தேர்தலிலும் தோற்று, '11 தோல்வி பழனிசாமி' என்ற அவப் பெயரை துடைக்க தேர்தலில் போட்டியிடாமல் கோழை போல பழனிசாமி களத்தைவிட்டே ஓடியிருக்கிறார். தன்னுடைய எஜமான் பாஜகவின் ஓட்டு வங்கிக்கு சேதாரம் வந்துவிடக் கூடாது என்பதற்காக பாதம்தாங்கி பழனிசாமி தேர்தல் புறக்கணிப்பு என்ற கூத்தை அரங்கேற்றியிருக்கிறார். தான் அசிங்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அதிமுகவையே பலீபீடமாக்கியிருக்கிறார். 2026 சட்டசபை தேர்தலுக்காவது வருவாரா? அல்லது ஓடி ஒளிவாரா?

'சட்டசபையில் நான் 2 மணி நேரம் பேசிய வீடியோவை கேட்டால் தரவில்லை' என சொல்லியிருக்கிறார் பழனிசாமி. உங்கள் ஆட்சியின் லட்சணம் என்ன? என தெரிந்து கொண்டாவது பழனிசாமி பேட்டி கொடுத்திருக்கலாம். அதிமுக ஆட்சியில், 'சட்டசபை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும்' என ஜெகதீசன் என்பவர் தொடர்ந்த பொது நல வழக்கில், 'நிதி நெருக்கடி காரணமாக நேரடி ஒளிபரப்புக்கு வாய்ப்பில்லை' என்று நீதிமன்றத்தில் கையை விரித்தவர்கள்தான், இன்று நேரடி ஒளிபரப்பை செய்யும் எங்களைப் பார்த்து வியாக்கியானம் பேசுகிறார்கள். அதிமுகவின் பத்தாண்டு ஆட்சியில் சட்டசபை நடவடிக்கைகளை அரசின் திரைப்படப் பிரிவின் சார்பில் வீடியோ எடுத்து எடிட் செய்து அவர்கள்தான் டிவிக்களுக்கு வழங்கினார்கள். அதில் ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. எதிர்க் கட்சியினர் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பது நினைவில் இல்லையா?

மாணவர்களின் மருத்துவ கனவை சீரழிக்கும் நீட் தேர்வை தனது ஆட்சிக்காலத்தில் பாஜகவுடன் சேர்ந்து கொண்டு வந்து துரோகம் செய்தவர் பழனிசாமி. அதை மறைக்க திராவிட மாடல் அரசின் மீது வீண் பழியை சுமத்துகிறார். நீட் தேர்வை ரத்து செய்ய ஏ.கே.ராஜன் கமிட்டி நியமனம், அந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டமன்றத்தில் நீட் ரத்து மசோதா என நீட் தேர்வை ரத்து செய்ய என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனை வழிகளிலும் திராவிட மாடல் அரசு முயற்சிகளை செய்து வருகிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நீட் தேர்விற்கு எதிராக திமுக அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடியது. அப்படி நடத்திய போராட்டங்களை அதிமுகவால் பட்டியல் காட்ட முடியும்?

"நீட் தேர்வு விலக்கு மசோதா கிடப்பில் போடப்பட்டு, வழக்கு நீதிமன்றத்துக்கு வந்து ஓராண்டுக்கு வெளியிலேயே தெரியாமல் அதிமுக ஆட்சியில்தான் இருந்தது. சட்டப்பேரவையில் கூட நீங்கள் தெரிவிக்கவில்லை" என முதலமைச்சர் கேள்வியெழுப்பி பழனிசாமியின் துரோகத்தை தோலுரித்தார். அதற்கு பதில் சொல்ல கோழை பழனிசாமிக்கு துணிவு இருந்ததா?

நீட் தேர்வை ரத்து செய்ய மாட்டோம் என பிடிவாதமாக நடைமுறைப்படுத்தி வரும் பாஜகவோடு அதிமுக கள்ளக்கூட்டாளி வைத்திருக்கிறது. அந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என 'இந்தியா' கூட்டணியை வலுப்படுத்தியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ராகுல் காந்தியும் நீட் தேர்வை ரத்து செய்வோம் என வாக்குறுதி அளித்தார். துரதிஸ்டவசமாக மீண்டும் பாஜக ஆட்சிக் கட்டிலேறிவிட்டது. நீட் தேர்வை ரத்து செய்யாமல் ஆதிக்கம் செய்யும் தனது கள்ளக்கூட்டாளி பாஜகவைப் பற்றி விமர்சிக்க கோழை பழனிசாமிக்கு மனம் வரவில்லையே ஏன்? எடப்பாடி பழனிசாமி உறவினர் என்.ராமலிங்கத்திற்கு சொந்தமான இடங்களில் தொடர்ந்து 5வது நாளாக வருமானவரித் துறை சோதனை நடைபெற்றது. அடுத்து நம்ம வீட்டுக்கு வந்துவிடுவார்களோ என்ற பயம் பழனிசாமிக்கு இருக்குமல்லவா? ''கோபால் என்னை போல தைரியமான ஆளாஞ் பயந்தவன் தானே. விரட்டி விரட்டி வெட்டினது எல்லாம் ஞாபகத்துக்கு வந்து போகும் இல்லையா'' என வடிவேலுவின் சூனாபானா கேரக்டர்தான் யூழனிசாமி.

மகளிர் உரிமைத் தொகையையும், மகளிர் விடியல் பயணத்தையும் இழிவுப்படுத்தி பேசியிருக்கிறார் பழனிச்சாமி. அவருடைய ஆட்சியில் காயலான் கடைக் கணக்காக ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை அகற்றிவிட்டு, புதிய பேருந்துகள் வாங்கி தமிழ்நாடு முழுக்க விட்டிருக்கிறது திராவிட மாடல அரசு. அதிலும் மகளிர் இலவச பயணம் செய்யக்கூடிய பேருந்துகளை முற்றிலும் புதுமையானதாகவும் சிறப்பானதாகவும் வடிவமைத்து விட்டிருக்கிறோம். இதெல்லாம் பேருந்தில் செல்பவர்களுக்கு தெரியும். எடப்பாடி பழனிச்சாமிக்கு எப்படி தெரியும். விடியல் பயணம் திட்ட பஸ்ஸுக்கு லிப்ஸ்டிக் அடித்து விட்டுள்ளார்கள் என்று கொச்சைப்படுத்தி ஓட்டுமொத்த மகளிரையும் கேவலப்படுத்தியிருக்கிறார்

## ஆர்.கே.நகர் பகுதியில் ஆட்டோ ஓட்டுநரை தாக்கிய சரித்திரப் பதிவேடு குற்றவாளி கைது.



சென்னை, 14 ஜனவரி 2025:

சென்னை, மணலி, பெரியசேக்காடு, பத்மாவதிநகர் 2வது தெருவில் வசித்து வரும் பேரின்பம், வ/58, த/பெ.ஆறுமுகம் என்பவர்ஆட்டோஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 08.01.2025 அன்று, மாலை தனது ஆட்டோவை வைத்தியநாதன் பாலத்தின் கீழ், நிறுத்திவிட்டு டீ குடிக்க சென்ற போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர் மது போதையில் கையில் இரும்பு பைப்பை வைத்து கொண்டு தகராறு செய்துள்ளார். இதனை கவனித்த ஆட்டோ ஓட்டுநர் பேரின்பம் மேற்படி நபரின் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பை பிடுங்கி கீழே போட்டுள்ளார் இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர், ஆட்டோ ஓட்டுநர் பேரின்பத்தை தகாத வார்த்தைகள் பேசி, இரும்பு பைப்பால் தாக்கி விட்டு, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றுள்ளார். காயமடைந்த பேரின்பம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, பி-6 ஆர்.கே.நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பி-6 ஆர்.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தினேஷ், வ/33, த/பெ.பிரகாஷ், சிவாஜிநகர், தண்டையார்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட தினேஷ் என்பவர் பி-6 ஆர்.கே.நகர் காவல் நிலைய சரித்திரபதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 9 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி தினேஷ் விசாரணைக்குப் பின்னர் நேற்று (10.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## கீழ்பாக்கம் பகுதியில் மாநகர பேருந்தின் மேற்கூரை மீதுஏறி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்திய 3 நபர்கள் கைது.

சென்னை, 14 ஜனவரி 2025: கடந்த 09.01.2025 அன்றுகாலை 11.35 மணியளவில் பூந்தமல்லி நெடுஞ்சாலை, டெய்லர்ஸ் ரோடு சந்திப்பில் நடந்து வந்த கல்லூரி மாணவர்கள் சிலர், அங்கு நின்று கொண்டிருந்த தடம் எண். 15 பி பேருந்தின் மேற்கூரை மீது ஏற முயன்றுள்ளார். ளுடனே அங்கு பணியிலிருந்த போலீசார், மாணவர்களை தடுத்து கீழே இறக்கிய பின்னர், ஊாணவர்கள் சத்தம் போட்டு கொண்டு பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தி கல்லூரியை நோக்கி நடந்து சென்றுள்ளனர். இது குறித்து ஜி-3 கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குபதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

ஜி-3 கீழ்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.ஜீவா, வ/20, த/பெ.ராஜா, வடகரை, செங்குன்றம், ெ□ன்னை 2. பவித்ரன், வ/20, த/பெ.சீனிவாசன், கன்னிகைபேர், சென்னை 3.புவியரசு, வ/19, த/பெ.குடியரசு, பாரதியார்நகர் 2வது தெரு, திருகண்டலம், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். ஊேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள குற்றவாளிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட ஜீவா மீது 4 வழக்குகளும், புவியரசு மீது 1 வழக்கு உள்ளதும் தெரியவந்தது.


கைது செய்யப்பட்ட 3 நபர்களும் நேற்று (10.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற ளுத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## அண்ணாநகர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பை வாடகைக்கு எடுத்து பாலியல் தொழில் நடத்திய பெண் கைது. 1 பெண் மீட்பு.

சென்னை, 14 ஜனவரி 2025: சென்னை பெருநகர காவல், விபச்சார தடுப்புப் பிரிவு-1 காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் நேற்று (10.01.2025) மதியம், அண்ணாநகர் மேற்கு, பாடிகுப்பம் ரோட்டில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டை கண்காணித்தபோது, அங்கு பெண்ணை வைத்து பாலியல் தொழில் நடத்தியது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட தனிப்படை போலீசார் மேற்படி வீட்டை சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்ணை வைத்து பாலியல் தொழில் நடத்திய கீதாகுமாரி, வ/54, க/பெ.உதயகுமார், பாடிகுப்பம் ரோடு, அண்ணாநகர் மேற்கு, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த வைத்திருந்த ஒரு பெண் மீட்கப்பட்டார். விசாரணையில் கீதாகுமாரி மேற்படி அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து பாலியல் தொழில் நடத்தி வந்தது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி கீதாகுமாரி விசாரணைக்குப் பின்னர் நேற்று (10.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார். மீட்கப்பட்ட ஒரு பெண் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

## மடிப்பாக்கம் பகுதியில் காரில் குட்கா புகையிலை பொருட்களை கடத்தி வந்த நபர் கைது. 451.760 கிலோகிராம் குட்கா புகையிலை பொருட்கள் ரொக்கம் ரூ.48,500/-,1 செல்போன் மற்றும் 1 கார் பறிமுதல்.



சென்னை, 14 ஜனவரி 2025: எஸ்-7 மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் குழுவினர் நேற்று முன்தினம் (10.1.2025)மடிப்பாக்கம், சதாசிவம் நகர் 3வது மெயின் ரோட்டில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுகொண்டிருந்த போது, அங்கு சந்தேகத்திற்கிடமாக வந்த காரை நிறுத்தி விசாரணை செய்த போது காரில் வந்த நபர் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். மேலும் காரை சோதனை செய்த போது அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை கடத்தி வந்தது தெரியவந்தது.

அதன்பேரில், எஸ்-7 மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பொருட்களை காரில் கடத்தி வந்த சராப்சிங் வ/22, த/பெ.ஜெகதீஷ் சிங், உட்வாரா கிராமம், ராஜஸ்தான் மாநிலம் என்பவரை கைது செய்தனர், அவரிடமிருந்து 451.760 கிலோகிராம் எடை கொண்ட குட்கா, புகையிலை பொருட்கள், ரொக்கம் ரூ.48,500/-, 1 செல்போன் மற்றும் 1 கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சராப்சிங் விசாரணைக்குப் பின்னர் நேற்று (11.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## அண்ணாசாலை ஜி.பி சாலை சந்திப்பு அருகே 'யூ' திருப்பம்

சென்னை, 14 ஜனவரி 2025: அண்ணாசாலை ஜி.பி. சாலை சந்திப்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க, பின்வரும் 'ஹி' திருப்ப மாற்றுப்பாதையானதுவரும் 11.01.2025 முதல் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்படும்:-

யூற்போது, ஜி,பி, சாலையில் இருந்து பாரிஸ் நோக்கி வரும் வாகனங்கள் அண்ணாசாலை ஜி.பி, சாலை சந்திப்பிற்குள் அனுமதிக்கப்படுகின்றன. இந்த நேரத்தில் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு பின் வரும் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

1. ஜி.பி. சாலையில் இருந்து பாரிஸ் நோக்கி வரும் வாகனங்கள், அண்ணாசாலையை நோக்கி இடதுபுறம் திரும்பி, எல்.ஐ,சி அருகே ஏற்படுத்தப்பட்டுள்ள (உத்தேசித்துள்ள சென்டர் மீடியன்) 'யூ' திருப்பத்தில் சென்று டேம்ஸ் சாலை வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

2. அண்ணா மேம்பாலத்தில் இருந்து ஜி.பி. சாலையை நோக்கி வரும் அனைத்து இலகு ரக வாகனங்களும் மவுண்ட் ரோடு மசூதி அருகே (புஹாரி ஹோட்டலுக்கு அருகில்) யு டர்ன் எடுத்து ஜிபி சாலையை அடைய அனுமதிக்கப்படும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

## சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில், பொதுமக்கள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் காணும் பொங்கலை கொண்டாடுவதற்கு 16,000 காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் மூலம் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.



சென்னை, 14 ஜனவரி 2025: 16.01.2025 அன்று காணும் பொங்கலை முன்னிட்டு பொதுமக்கள் தங்கள் குடும்பத்தாருடன் மெரினா கடற்கரை உள்ளிட்ட இதர பொழுது போக்கு இடங்களுக்கு அதிகளவில் வருவதால், எவ்வித அசம்பாவிதமும் நிகழா வண்ணம் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணும் பொங்கலை கொண்டாடுவதற்காக சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இகாப, அவர்கள் உத்தரவின் பேரில், விரிவான பாதுகாப்பு ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள் அறிவுரையின் பேரில்16,000 காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் சுமார் 1,500ஊர்க்காவல் படையினரும்மூலம் காணும் பொங்கல் கொண்டாட்டத்தின் போது பாதுகாப்பு அளிக்க சென்னை பெருநகர காவல் துறை விரிவான தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1. மெரினா கடற்கரை (உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை) சென்னையில் காணும் பொங்கலை முன்னிட்டு உழைப்பாளர் சிலை முதல் காந்தி சிலை வரை 3 தற்காலிக காவல் கட்டுப்பாட்டறைகள் அமைக்கப்பட்டும், உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரையிலுள்ள 7 சர்வீஸ் சாலைகளின் நுழைவு வாயில்களில் காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டும், அவசர மருத்துவ உதவிக்காக மருத்துவக் குழுவினருடன் 8 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் மீட்புப் பணிக்காக தீயணைப்பு வீரர்கள் அடங்கிய 2 தீயணைப்பு வாகனங்கள் ஆகியவை தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படும். இவை தவிர மீட்புப் பணிக்காக மோட்டார் படகுகள் மற்றும் சுமார் 200க்கும் மேற்பட்ட நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படுவார்கள்.

2. கடற்கரை மணற்பரப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரையில் உள்ள மணற்பரப்பில் 13 தற்காலிக காவல் கண்காணிப்பு உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு உயர் கோபுரத்திலும் 3 பேர் கொண்ட காவல் குழுவினர் பணியமர்த்தப்படுவர். அவர்களுக்கு வாக்கி டாக்கி கருவி, மெகா போன், பைனாகுலர் ஆகியவை வழங்கப்பட்டு,வாட்சப் குழு அமைக்கப்பட்டும், பைனாகுலர் மூலம் காவலர்கள் கண்காணித்து மெகா போன் மூலம் பொதுமக்களுக்கு அறிவுரைகள் வழங்கியும், கட்டுப்பாட்டறைக்கு வான் தந்தி கருவி மூலமும், வாட்சப் குழுவிலும் உடனுக்குடன் தகவல்களை வழங்குவார்கள். மேலும்,12 முக்கிய இடங்களில் கூடுதலாக 13 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, தற்காலிக கட்டுப்பாட்டறையில் உள்ள அகன்ற திரைகளில் கண்காணிக்கும் பணி மேற்கொள்ளப்படும். காணும் பொங்கலன்று பொதுமக்கள் கடலில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால், கடற்கரையோரம் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். சென்னை பெருநகர காவல் மற்றும் கடலோர காவல் குழுமத்தின் கடற்கரை உயிர்காக்கும் பிரிவின் 85 காவல் ஆளிநர்கள் கடற்கரை ஒட்டிய பகுதிகளில் பொதுமக்கள் கடலில் இறங்காத வண்ணம் தீவிரமாக கண்காணிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

3. பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரை பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் 1 தற்காலிக காவல் கட்டுப்பாட்டறை, 3 தற்காலிக காவல் கண்காணிப்பு உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டு, காவல் ஆளிநர்களால் பைனாகுலர் மூலம் கண்காணிக்கப்படுவதுடன், ஒலிபெருக்கி மூலம் அறிவுரைகள் வழங்கப்படும். மேலும், குதிரைப்படை மற்றும் சுற்றுக் காவல் ரோந்துவாகனங்கள் மூலம் ரோந்து வரப்பட்டு, கண்காணிக்கப்படுவதுடன், ஒலிபெருக்கி மூலம் அவ்வப்போது பாதுகாப்பு குறித்த அறிவுரைகளும் வழங்கப்படும். 2 ஆம்புலன்ஸ் வாகனங்கள், தீயணைப்பு வாகனம், அப்பகுதியை சேர்ந்த நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் மற்றும் மோட்டார் படகுகள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படும். .

## அடமானஉத்தரவாத வீட்டுக் கடன்களை வழங்க ஐஎம்ஜிசி மற்றும் ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் நிறுவனங்கள்இடையே கூட்டாண்மை

சென்னை, 14 ஜனவரி 2024: இந்தியாவின் முதல் அடமான உத்தரவாத நிறுவனமான இந்தியா மார்ட்கேஜ் கேரண்டி கார்ப்பரேஷன் (ஐ எம் ஜி சி), புதுமையான அடமான உத்தரவாத ஆதரவு வீட்டுக் கடன் தயாரிப்புகளை வழங்குவதற்காக, முன்னணி வீட்டு நிதி நிறுவனங்களில் ஒன்றான ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஜிஐசிஎச்எஃப்எல்) உடன் தனது மூலோபாய கூட்டாண்மையை அறிவித்தது. இந்த கூட்டாண்மை கடன் வாங்குபவர்களுக்கு மிகவும் நெகிழ்வான மற்றும் பாதுகாப்பான வீட்டுக் கடன் தயாரிப்புகளை வழங்க உதவும். அதிகரித்த தேவை மற்றும் அரசாங்க முயற்சிகளால் இந்தியாவில் வீட்டுவசதிப் பிரிவு சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காண்கிறது. கடன் வழங்குநர்கள் குறைந்தபட்ச அபாயத்துடன் பொறுப்பான கடனில் இறங்க உதவுதற்கும் வீடு வாங்குபவர்கள் அதிக தகுதி மற்றும் குறைந்த சமமான மாதாந்திர தவணைகள் மூலம் தங்கள் வீடு சொந்தமாக்கும் கனவுகளை நிறைவேற்ற உதவுவதிலும் இந்த அடமான உத்தரவாதம் ஒரு தயாரிப்பாக முக்கிய பங்கு வகிக்கிறது.



இக்கூட்டாண்மை குறித்து பேசிய ஐஎம்ஜிசி - இன் தலைமை கூட்டணி அதிகாரி திருமதி அக்ரிதி சிங் கூறுகையில், ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் உடன் இணைந்து அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு புதுமையான அடமான உத்தரவாத தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வீட்டு உரிமையை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை இந்தக் கூட்டாண்மை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இத்தகைய அடமான உத்தரவாத அடிப்படையிலான புதிய தயாரிப்புகள் கடன் வழங்குபவருக்கு இடர் குறைப்பில் கவனம் செலுத்துவதற்கும் செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்கும் உதவுகின்றன" என்று கூறினார்.

இது குறித்து ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பால் லோபோ கூறுகையில், "இந்த ஒத்துழைப்பு எங்கள் சலுகைகளின் வரம்பை விரிவுபடுத்துவதற்கு மட்டுமல்லாமல், நடுத்தர மற்றும் குறைந்த வருமானக் குழுக்களுக்கு வீட்டு உரிமையை மேலும் அணுகக்கூடியதாக மாற்றும்" என்று கூறினார்.

1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஜிஐசிஎச்எஃப்எல்), தனிநபர்கள் தங்கள் சொந்த வீட்டு கனவை அடைய உதவுவதில் ஒரு முன்னணி வீட்டு கடன்வசதி நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய பொது காப்பீட்டுக் கழகம் மற்றும் அதன் முந்தைய துணை நிறுவனங்களான நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியவற்றால் ஊக்குவிக்கப்படுகிறது.

இதன் நிறுவன கூட்டாளிகளில் முக்கிய நிதி நிறுவனங்களான யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா, ஐசிஐசிஐ, ஐஎப்சிஐ, எச்டிஎப்சி, எஸ்பிஐ போன்ற நிறுவனங்கள் இந்நிறுவனத்தின் ஆரம்ப பங்கு மூலதனத்திற்கு கூட்டாக பங்களித்தது. ஜிஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் இந்தியாவின் 21 மாநிலங்களில் 71 கிளைகள் மற்றும் 5 செயற்கைக்கோள் அலுவலகங்களின் வலையமைப்புடன் வலுவான வாடிக்கையாளர் வசதியை உறுதி செய்கிறது.

2012 இல் நிறுவப்பட்ட ஐஎம்ஜிசி நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கியின் அடமான உத்தரவாத நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்கள் (2008) இன் கீழ் செயல்படும் இந்தியாவின் முதல் அடமான உத்தரவாத நிறுவனம் ஆகும். நாடு முழுவதும் 400க்கும் மேற்பட்ட பகுதிகளை சேர்ந்த 130,000 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ரூபாய் 30,000 கோடி மதிப்பிலான வீட்டுக் கடன் உத்தரவாதங்களை வழிங்கியுள்ளது. இந்த நிறுவனம் வங்கிகள், வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் உட்பட 23 க்கும் மேற்பட்ட கடன் நிறுவனங்களுடன் கூட்டாண்மை கொண்டுள்ளது.

## சிதம்பரம் நடராஜர் கோவில் சிறப்பு தபால் உறை வெளியீடு




சென்னை, 14 ஜனவரி 2025: ஆருத்ரா தரிசனத்தையொட்டி உலகப்புகழ் சிதம்பரம் நடராஜர் கோவில் பின்னணியோடு முதல் நாள் சிறப்பு உறையை நேற்று (12 ந் தேதி) இந்திய தபால் துறை வெளியிட்டது. இதில் கோவில் கோபுரம், வளாகத்தில் பிரகாரம், நடராஜர் சிலை, தேர் இடம் பெற்றுள்ளது.

## திருப்பதியில் லட்டு வினியோக கவுண்டரில் திடீர் தீ

சென்னை, 14 ஜனவரி 2025:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் திருமலை பிரசாதமான லட்டு வினியோக கவுண்டரில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக தீ அணைக்கப்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.



திருப்பதியில் அமைந்துள்ள ஏழுமலையான தரிசிக்க தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசித்து செல்கின்றனர். மேலும் பண்டிகை நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் பல மணி நேரம் காத்திருந்து பெருமாளை தரிசனம் செய்கின்றனர்.

இதனிடையே ஏழுமலையான் கோவிலில் திருமலை பிரசாதம் வழங்கும் லட்டு வினியோக வளாகத்தில் உள்ள 47ம் எண் கவுண்டரில் தீ விபத்து ஏற்பட்டது. லட்டு வினியோக கவுண்டரில் இருந்து கரும்புகை வெளி வருவதை பார்த்ததும், லட்டு வாங்க வரிசையில் காத்திருந்த பக்தர்கள் அங்கிருந்து அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். தகவல் அறிந்து அங்கு வந்து தேவஸ்தான மின்சார துறை அதிகாரிகள் மின்வினியோகத்தை நிறுத்தினர். யு.பி.எஸ்.சில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தனர். உடனடியாக தீ அணைக்கப்பட்டதால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

# ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்திற்காக மத்திய அரசின் தேசிய சுகாதார ஆணையத்திற்கும் ஒடிசா அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதற்காக ஒடிசா மக்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்



சென்னை, 14 ஜனவரி 2025: , ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்திற்கு மத்திய அரசின் தேசிய சுகாதார ஆணையத்திற்கும் ஒடிசா அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதற்காக ஒடிசா மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் குறைந்த கட்டணத்தில், ஒடிசாவின் மகளிர் மற்றும் முதியோருக்கு உயர்தர சுகாதார சேவை கிடைப்பதை உறுதி செய்யும் என்று திரு மோடி குறிப்பிட்டுள்ளார்.

ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஞ்சியின் சமூக ஊடக எக்ஸ் தளப் பதிவுக்கு பதிலளித்து பிரதமர் பதிவிட்டிருப்பதாவது:

"ஒடிசா மக்களுக்கு வாழ்த்துகள்!

சூடிசாவின் எனது சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பலன்கள் முந்தைய அரசால் மறுக்கப்பட்டன. உண்மையில் அது கேலிக்குரியது. இந்தத் திட்டம் குறைந்த செலவில் மிக உயர்ந்த, தரமான சுகாதார சேவையை உறுதி செய்வதாகும். குறிப்பாக ஒடிசாவின் மகளிர் மற்றும் முதியோருக்கு பயனளிக்கும்.".

# காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் செயல்பாடுகளை மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மஞ்சி ஆய்வு செய்தார்



சென்னை, 14 ஜனவரி 2025: , மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சர் திரு ஜித்தன் ராம் மஞ்சி, நாட்டில் காதி, கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்காக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் நடத்தும் திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணைய தலைவர் திரு மனோஜ் குமார், எம்.எஸ்.எம்.இ. செயலாளர், இணைச் செயலாளர், பொருளாதார ஆலோசகர், ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் ஆகியவற்றின் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். நாட்டில் கதர் கிராமத் தொழில் துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அமல்படுத்துவதில் விரிவான கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் வலியுறுத்தினார்.

# நீர்வள மேலாண்மையில் நிபுணத்துவத்தைப் பரிமாறிக் கொள்ளவும், ஆதரவளிக்கவும் சென்னை வந்த அமெரிக்காவின் ஃபெமா மற்றும் சான் அன்டோனியோ நதி ஆணைய அதிகாரிகள்



சென்னை, 14 ஜனவரி 2024: அமெரிக்க வெளியுறவு மற்றும் உள்துறைகளின் முன்முயற்சியான தூதரின் நீர் நிபுணர் திட்டத்தின் (ஏடபிள்யூஈபி) கீழ் பயணிக்கும் இரு நபர் குழு, அமெரிக்க துணைத் தூதரகத்தின் அழைப்பின் பேரில் ஜனவரி 2 முதல் 13 வரை சென்னை வந்திருந்து, நீர்வள சவால்கள், பேரிடர் மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றம் குறித்து நிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் உரையாடினர்.

சான் அன்டோனியோ நதி ஆணையத்தின் (சாரா) நீர்வள இயக்குநர் ஸ்டீவன் மெட்ஸ்லர் மற்றும் அமெரிக்காவின் மத்திய அவசரநிலை மேலாண்மை அமைப்பு (ஃபெமா) மண்டலம் 5 தணிப்புப் பிரிவின் துணை இயக்குநர் ஜூலியா மெக்கார்த்தி ஆகியோர் அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தைப் பார்வையிட்டனர். சென்னை ஐஐடியில் நடந்த சாஸ்த்ரா தொழில்நுட்ப விழாவின் போது எதிர்கால நகரங்கள் குறித்த உச்சி மாநாட்டின் சுவாரசியமான உரையாடல் ஒன்றில் பங்கேற்ற இரு நிபுணர்களும், இந்திய தொழில்துறை கூட்டமைப்புடன் இணைந்து (சி ஐ ஐ) வணிக பங்குதாரர்களைச் சந்தித்தனர். அடையாறு நதியில் கதைசொல்லல் சுற்றுப்பயணத்தை அவர்கள் மேற்கொண்டதோடு உமேஜின் 2025 நிகழ்வில் "காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதுமையான தீர்வுகள்: ஒரு உலகளாவிய பார்வை" என்ற தலைப்பிலான குழு விவாதத்தில் நிபுணத்துவத்தை வழங்கினர்.

சென்னை மேயர் ஆர். பிரியா; தமிழ்நாடு நீர்வளத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன்; நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் டி. கார்த்திகேயன்; மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் ஆகியோருடனும் இந்தக் குழு கலந்துரையாடல்களை நடத்தியது.

சான் அன்டோனியோ நதி ஆணையத்தின் நீர்வள இயக்குநர் ஸ்டீவன் மெட்ஸ்லர் கூறுகையில், "எனது இந்திய சகாக்களும் நானும் சக ஊழியர்களாகவும் நண்பர்களாகவும் மாறிவிட்டோம். எனது சொந்த ஊரான சான் அன்டோனியோவின் சகோதரி நகரமான சென்னையில் நீர்வள பொறியியலில் எனது அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொள்வது மிகவும் பொருத்தமானது. சென்னை மற்றும் அதன் சகோதரி நகரமாக திகழும் எனது சொந்த ஊரான சான் அன்டோனியோவில் ஓடும் ஆறுகள் இந்த துடிப்பான மற்றும் சிறந்த நகரங்களின் வரலாறு, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் முக்கிய பங்கு வகிப்பதோடு, வாய்ப்புகளையும் சவால்களையும் வழங்குகின்றன. நாம் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கான ஒரு தனித்துவமான வழியாக இந்தத் திட்டம் விளங்குகிறது," என்றார்.

ஃபெமா பிராந்தியம் 5 தணிப்புப் பிரிவின் துணை இயக்குநர் ஜூலியா மெக்கார்த்தி கூறுகையில், "தூதரின் நீர் நிபுணர்கள் திட்டத்தின் மூலம் வெள்ள அபாயத்தை அடையாளம் காண்பது, மேலாண்மை மற்றும் தணிப்பு ஆகியவற்றில் எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நகரம் மற்றும் அதன் மக்களின் நலனுக்கு வெள்ளப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை மிகவும் முக்கியமானது. சவால்கள் இருந்தாலும், நிலைமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளும் உள்ளன. இவை குறித்து மாநில அரசு மற்றும் மாநகராட்சி உடன் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்," என்றார்.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ் கூறுகையில், "நதி மறுசீரமைப்பு, பயனுள்ள கழிவுநீர் மேலாண்மை, வெள்ளத் தணிப்பு மற்றும் பேரிடர் மீள்தன்மை ஆகியவற்றில் தமிழக அரசின் தொடர்ச்சியான முயற்சிகளை அமெரிக்கா ஒரு கூட்டாளியாகவும் நண்பராகவும் ஆதரிக்கிறது. சென்னை வந்திருந்த நிபுணர்களின் மூலம் அமெரிக்க தொழில்நுட்ப நிபுணத்துவம், வணிக கூட்டாண்மை மற்றும் சிறந்த நடைமுறைகள் மூலம் தமிழ்நாட்டுடன் தொடர்ச்சியான கூட்டாண்மைக்கான அளவிடக்கூடிய திட்டத்தை சென்னை அமெரிக்க துணைத் தூதரகம் வகுத்துள்ளது. இத்திட்டம் டெக்சாஸில் உள்ள சான் அன்டோனியோவிற்கும் சென்னைக்கும் இடையிலான சகோதரி நகர கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் திறக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள பிற நகரங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இது செயல்படக்கூடும்," என்றார்.

# சாம்சங் இந்தியாவில் அடுத்த கேலக்ஸி எஸ் சீரிஸிற்கான முன்இருப்பைத் திறக்கிறது




கோயம்புத்தூர், 14 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று முதல் நுகர்வோர் தங்கள் அடுத்த கேலக்ஸி எஸ் சீரிஸ் ஸ்மார்ட்போனை முன்பதிவு செய்யலாம் என்று அறிவித்துள்ளது. புதிய கேலக்ஸி எஸ் தொடர் மொபைல் ஏஐ இல் ஒரு புதிய அத்தியாயத்தை வெளியிடும், இது உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் தடையற்ற வசதியைக் கொண்டுவரும் பிரீமியம் கேலக்ஸி கண்டுபிடிப்புகளை வெளியிடும்.

கேலக்ஸி ஏஐ இன் அடுத்த பரிணாமத்தை சாம்சங் கொண்டு வரும், இது நுகர்வோர் ஒவ்வொரு நாளும் உலகத்துடன் தொடர்பு கொள்ளும் முறையை மாற்றும். புதிய கேலக்ஸி எஸ் சீரிஸ் மொபைல் ஏஐ அனுபவங்களுக்கு மீண்டும் பட்டியை அமைக்கும். சாம்சங் தனது அடுத்த தலைமுறை கேலக்ஸி எஸ் தொடரை ஜனவரி 22 ஆம் தேதி கலிபோர்னியாவின் சான் ஜோஸில் கேலக்ஸி அன்பேக்டு இல் வெளியிடும்.

# கோட்டக் மஹிந்திரா வங்கி, 'சேஹத் கா சஃபர்' என்னும் வர்த்தக வாகன ஓட்டுனர்களுக்கான நாடு தழுவிய சுகாதாரப் பரிசோதனை முகாம்களின் மூன்றாவது பதிப்பை அறிவித்துள்ளது




சேலம், 14 ஜனவரி 2024: கோட்டக் மஹிந்திரா வங்கி ("கே எம் பி எல்" / "கோட்டக்") இந்திய வர்த்தக வாகன ஓட்டுனர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் 'சேஹத் கா சஃபர்' சி எஸ் ஆர் முயற்சியின் மூன்றாம் பதிப்பு தொடங்கப்படுவதை பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த ஆண்டு, இந்த முயற்சி முந்தைய பதிப்பின் 30 இடங்களில் இருந்து 45 குறிப்பிடத்தக்க இடங்களுக்கு விரிவடையும், இலவச சுகாதார பரிசோதனை முகாம்கள் மூலம் சுமார் 4,000 டிரக் ஓட்டுநர்கள் பயனடைவர்.

துலியாஜன், துர்காபூர், பாட்னா, டெல்லி, கோயம்புத்தூர், போபால் போன்ற முக்கிய நகரங்களில் அதிக அடர்த்தி கொண்ட போக்குவரத்து மையங்களில் நடைபெறும் இந்த முகாம்கள், நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஓட்டுநர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான கோட்டக்கின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றன.

சுகாதாரப் பரிசோதனைகள் மட்டுமின்றி, முகாம்களில் உள்ள ஆலோசகர்கள், ஓட்டுநர்களுக்கு தினசரி சுகாதார நடைமுறைகள் குறித்தும், அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பயன்படுத்துவதற்கும் வழிகாட்டுவார்கள். ஒவ்வொரு முகாமிலும் டாக்டர்கள் உங்களுக்காக டாக்டர்கள் மற்றும் நர்சிங் ஊழியர்கள் பணியாற்றுவார்கள்.

கோட்டக் மஹிந்திரா வங்கியின் லாஜிஸ்டிக்ஸ் மற்றும் உள்கட்டமைப்புத் தலைவர் அமித் மோகன் அவர்கள், 'வர்த்தக வாகன ஓட்டுநர்கள் நமது பொருளாதாரத்தை நகர்த்துவதற்கு நீண்ட மணி நேரம் செலவிடுகிறார்கள், பெரும்பாலும் தங்கள் சொந்த ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த நேரம் இல்லாமல். 'சேஹத் கா சஃபர்' மூலம், அவர்களுக்குத் தகுதியான கவனிப்பையும் ஆதரவையும் வழங்குவதன் மூலம் நாங்கள் திருப்பித் தருகிறோம். இந்த ஆண்டு இந்த முயற்சியை 45 இடங்களுக்கு விரிவுபடுத்தும்போது, இன்னும் அதிகமான ஓட்டுநர்கள் பயனடைவார்கள், ஆரோக்கியமான, பாதுகாப்பான வாழ்க்கையை நடத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

2023 இல் தொடங்கப்பட்ட 'சேஹத் கா சஃபர்' கடந்த 2 ஆண்டுகளில் 60 மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்துள்ளது, இது 6,000 ஓட்டுநர்களின் வாழ்க்கையின் நேர்மறை விளைவை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் பெரியாருக்கு நினைவு மண்டபம்: ஸ்டாலினுக்கு பகுத்தறிவாளர் கல்வி வளர்ச்சி இயக்கம் கோரிக்கை

சென்னை, 14 ஜனவரி 2025: சென்னையில் பெரியாருக்கு நினைவு மண்டபம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழக பகுத்தறிவாளர் கல்வி வளர்ச்சி இயக்கத்தின் தலைவர் விக்டர் தேவ சகாயம் கோரிக்கை வைத்தார். அதற்கு தமிழ் வளர்ச்சி செய்தித்துறை ஆணை இயக்குனர் கோ.சண்முகம், பெரியார் அண்ணா நினைவகம், ஈரோட்டில் உள்ளது. தந்தை பெரியார் அவர்ளுக்கு மணிமண்டபம் அமைப்பது அரசின் கொள்கை முடிவாகும் என்று பதிலளித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக விக்டர் தேவ சகாயம் முதல்வருக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சென்னையில் காந்தி, காமராஜர், பக்தவச்சலம், அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என அனைவருக்கும் நினைவிடம், மண்டபம் கட்டியவர் கருணாநிதி அவருக்கே நினைவிடம் அமைத்த நீங்கள்ஒன்றை மட்டும் இன்னும் விட்டு வைத்திருக்கிறீர்கள். அதுவும் சென்னையில். அவரே தந்தை பெரியார். இன்றைய இளைஞர்களிடம் பெரியார் சதுக்கம் எங்கே? என்று கேட்டால் தெரியாது என்கிறார்கள். பலர் ஈரோடு என்றும், இன்றைய சூழலில் வைக்கத்தில் என்றும் கூறுகிறார்கள்.

தினமும் கடற்கரையில் இருக்கும் தலைவர்களைப் பார்த்து நினைவு கூர்ந்து செல்லும் மக்கள் கூட்டத்தில். 1% கூட பெரியார் சதுக்கம் வருவதில்லை. இதை அன்றே அனைத்துத் தலைவர்களும் செய்திருக்கும் சிந்தனை உடையவர்களுக்கு இச்சிந்தனை அன்றைய சூழலில் இல்லாமல் போய்விட்டது.

எனவே, தந்தை பெரியாருக்கு கிழக்குக் கடற்கரை சாலையில் ஒரு மண்டபம், மிகப்பிரம்மாண்டமாக அமைக்கலாம். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அவரின் நினைவிடத்திற்கு நேர் எதிரில் உள்ள இடங்களின் நிர்வாகிகளோடு பேசி அதனை விரிவுப்படுத்திடலாம்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.